RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# தொல்பழங்குடியின மக்களின் உணவுப் பண்பாட்டியல்

**தே. ராஜகுமார் [அ, *], இரா.அசோக் [அ]**

[அ] தமிழ்த்துறை, தியாகராசர் கல்லூரி, மதுரை-625009, தமிழ்நாடு, இந்தியா.

# Food Culture of Tribal People

**D. Rajakumar [a, *], R. Ashok [a]**

[a] Department of Taml, Thiagarajar College, Madurai-625009, Tamil Nadu, India

* Corresponding Author:
rajakumar@gmail.com

Received: 10-04-2024
Revised: 12-06-2024
Accepted: 23-06-2024
Published: 01-08-2024

Check for updates

**ABSTRACT**

One of the essentials of the universe is food. An individual's food cannot be taken only for sustenance. Food is the culture of human life, being together with culture. This research paper has been prepared with the evidence of the witnesses with the aim of clarifying that the food systems of the tribal people are united with the cultures and without forgetting the present day environment of the tribal people and the rituals associated with the food, we too should know and benefit from the benefits of the food system in our lives.

**Keywords:** Food, Hunting, Janu, Peta, Forest, Oon, Mandu, Kumbha Devaru

## முன்னுரை

மனித சமுதாயத்தின் தொல்பலங்குடிகளாக இருக்கக்கூடிய பழங்குடியின மக்கள் தங்களுக்கானத் தனி பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் உடையவர்கள் இந்தியாவில் 30 மாநிலங்கள்மற்றும் யூனியன் பிரதேசங்களில் 705 பிரிவு பழங்குடியின மக்கள் வாழ்கின்றனர். தோராயமாக 10.45 கோடி மக்கள் வாழ்கின்றனர். (2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு) இதில் தமிழ்நாட்டின் 36 வகையான பழங்குடியின மக்கள் வாழ்கின்றனர் இவர்கள் வாழ்விடம் மலையையும் காட்டையும் சார்ந்தே அமைந்திருக்கும்.

ஆதி மனிதன் தன் உணவு வேட்கையின் தான் இருந்த காடுகளில் வேட்டையாடியும் தேடி சேகரித்தும் தான் வாழ்ந்திருந்தான். மனித குலத்தின் முதல் வாழ்க்கை முறை வேட்டையாடி உணவு சேகரித்தலாகும். குலமக்களுடன் ஒற்றுமையாக வாழ்கின்றனர் அவர்கள் உணவு தேடலின் பொழுது கூட்டமாக உணவு சேகரிக்க செல்வதும் சேர்த்த உணவினை இறைவனுக்கு படைத்த பிற்பாடு ஊருக்கு பொதுவான இடத்தில் தங்களுக்குள் பங்கிட்டு உண்பதையே வாழ்வில் ஒரு அங்கமாக கொண்டு வாழ்கின்றனர். “தமிழ் சமுதாயத்தில் அத்தகு வாழ்வு முறை குறிஞ்சித் திணையில் தோன்றியது.” (பக்தவத்சல பாரதி, தமிழகப் பழங்குடிகள்”. ப.எண்116.)

## பழங்குடியின மக்கள் உணவுப் பண்பாடு


ஆதிகாலம் முதலே பழங்குடியின மக்கள் இயற்கையோடு ஒன்றி வாழ்பவர்கள். காடுகளையும் மலைகளையும் தங்கள் வசிப்பிடமாகக் கொண்ட பழங்குடியின மக்கள் தங்கள் உணவு, உடை,

இருப்பிடம் அனைத்துமே இயற்கையோடு ஒன்றிய அமைந்திருக்கும். இலைகளை தங்கள் இடைகளில் அணிந்து, காய்கனிகளை உண்டும், மரத்தினாலும், கற்களினாலும் செய்யப்பட்ட ஆயுதத்தால் வேட்டையாடியும் அவர்களின் வாழ்க்கை முறையினை வாழ்ந்தனர். "இவர்கள் பழங்குடிகள் பொதுவாக, பழங்குடி, முதுபழங்குடி, தொல்குடி ஆகியோர் எழுத்தறிவிற்கு முந்தைய சமுதாயம் என்று அழைக்கப்படுகின்றனர்." (நே.தேவசகாயம், தமிழ்நாட்டு மலைவாழ் பழங்குடி மக்கள், ப.எண் 11.)

பழங்குடியின மக்கள் அடர்ந்த வனப் பகுதியில் வாழ்வதால் விலங்குகளை வேட்டையாடுகின்றனர். வனத்தில் கிடைக்கும் தேன், கனி வகைகள், கிழங்கு வகைகளை உண்டு வாழ்கின்றனர். இந்த மக்கள் தன் சேகரித்து உணவினை தன் வசிப்பிடத்தில் வாழும் சக மக்களுக்கும் பகிர்ந்து அளித்து உண்ணுகின்றனர். இவர்களின் உணவு தேடலும் ஒரு குழுவாகவே அமைந்திருக்கும். ஆண்கள் வேட்டையாடுதலும் பெண்கள் உணவு சேகரித்துளுமாய் இருந்தனர். "தாவர உணவு பொருட்களை சேகரித்த பெண்களை விவசாயத்தை கண்டுபிடித்தவர் எண்ணலாம் ஆதலின் ஆதி விவசாயி பெண்களே என்பதும் அதன் மூலம் விளங்குகிறது."(பக்தவத்சல பாரதி, தமிழக பழங்குடிகள், ப.எண்-118.) உழவுத் தொழிலை செய்த முதல் குடிகளும் பழங்குடியின மக்களை அவர்கள் சோளம், கம்பு,தினை, வரகு, கிழங்கு வகைகளை பயரிட்டு வாழ்ந்தனர்.

## குறும்பர்களின் உணவுத் தேடல்

குறும்பர் இன மக்களின் வசிப்பிடமும் உணவு தேடல் முறையும் பாரம்பரியமே அவர்களின் குடி பெயர்களோடு அமைந்துள்ளதைக் காணலாம்.




## முள்ளுக் குறும்பர்கள்

நீலகிரி மாவட்டத்தில் வாழக்கூடிய பழங்குடி இனமாகும். முள்ளுக்குறும்பர்களின் வாழ்வில் உணவு முறை என்பது சடங்குகளுடன் இணைந்து பயணிக்கிறன. முள்ளுக்குறும்பர்கள் அடர்ந்த வனப்பகுதியில் வாழ்கின்றனர். இவர்கள் தங்கள் வாழ்விடத்தில் உள்ள விலங்குகளை வேட்டையாடி ஊண் உண்பதே வாழ்வில் அங்கமாக இருக்கின்றது. இப்பழங்குடியின மக்கள் தங்கள் வாழ்வில் வேட்டையாடும் உணவு தேடல் பணித் தங்கள் சடங்குகளோடு காணப்படுகின்றன. திருமணத்திற்கு முன் வேட்டைக்குச் சென்று தன் திறமையை மணமகன் நிரூபிக்க வேண்டும். இவர்களின் திருமண நிகழ்வுகளில் வேட்டையாடுதல் என்பது ஒரு முக்கியமான நிகழ்வாக பார்க்கப்படுகிறது. "திருமணத்திற்கு முன்பே மாப்பிள்ளை வீட்டாரும் பெண் வீட்டாரும் பெண் வீட்டாரும் இணைந்து வேட்டைக்குச் செல்வார்கள் இந்நிகழ்வை 'வெண்டுவ நாயாட்டு' என்பார்கள்." (பக்தவத்சல பாரதி, தமிழகப் பழங்குடிகள், ப.எண்- 126.)

## ஜேனுக் குரும்பர்கள்

ஜேனு என்றால் தேன் என்பது பொருள். ஆகையால் பழங்குடியின மக்கள் ஜேனுக் குறும்பர்கள் என்று அழைக்கப்படுகின்றார்கள். இக்குரும்பர் இன மக்கள் தேன் எடுப்பதினையே அவர்களின் உணவு தேடலில் பிரதானமாகக் கொண்டுள்ளனர். "குறிஞ்சி மலர்கள் பூக்கும் நேரத்தில் கிடைக்கும் தேன் மிக உயர்ந்த தேன் என்பார்கள் மூங்கில் குழல்களில் தேனை சேகரிக்கிறார்கள். (பத்வத்சல பாரதி, தமிழகப் பழங்குடிகள்,ப.எண்- 126.)

ஜேனுக் குறும்பர்கள் தங்களது திருமண உருவில் உணவு பொருளை கொண்டு தீர்மானிக்கின்றனர். "வெற்றிலை பாக்கி மாற்றிக்கொண்ட உடன் ஆணும் பெண்ணும் கணவனும் மனைவியாக உறவைமேற்கொள்ளும் அளவிற்கு எளிமையானது." (எட்கர் தர்ஸ்டன், காதம்பிரங்காச்சாரி), (பத்வத்சல பாரதி, தமிழகப் பழங்குடிகள், ப.எண்- 106.)

## பெட்டக் குறும்பர்கள்

பெட்டா என்பது மலை என்று பொருள். இவர்கள் மலைகளில் வாழ்வதினால் பெட்டக் குறும்பர் என அழைக்கின்றனர். முதுமலை, தெப்பக்காடு பகுதிகளில் வாழும் பெட்ட குரும்பர்கள் யானைகளைப் பழக்குவதில் தேர்ந்தவர்களாய் உள்ளனர் இவர்களின் உணவு தேடல் என்பது தேன் எடுப்பதும், பயிரிடுவதுமாய் உள்ளது. இவர்கள் ஜேன் குரும்பர்களை விட சிறந்த உணவை உண்ணுகின்றனர். "ஜேன் குருபர்கள் காட்டெரிமையின் இறைச்சியை உண்பர் அதனை இவர்கள் உண்பதில்லை". (எட்கர் தர்ஸ்ன், காதம்பி ரங்காச்சாரி)(பத்வத்சல பாரதி, தமிழகப் பழங்குடிகள், ப.எண்- 108.)

## ஆலுக் குரும்பர்கள்

ஆலு என்பதன் பொருள் பால். இவர்கள் பால் தரக்கூடிய கால்நடைகளை மேய்க்கக் கூடியவர்களாக வாழ்பவர்கள். இவர்கள் கோத்தகிரி, குன்னூர், குந்தா பகுதியில் வாழ்கிறார். இவர்கள் பால் சம்பந்தப்பட்ட உணவுகளையும், காடுகளில் கிடைக்கும் கீரை வகைகள், கிழங்கு, காய்கனி வகைகள், இறைச்சிகளையும் உணவாக உகின்றனர். இவர்கள் வாழும் பகுதிகளில் பெரும்பாலும்பலாப்பழம் மரங்களை அதிகம் காணலாம். "இவர்களும் வேட்டையாடிய குரும்பர்களே என்கின்றனர். இவர்கள் எந்த நிகழ்வாக இருந்தாலும் முன்னோர்களுக்கு உணவு கிடைக்காமல் உணவு உண்பதில்லை" பழங்குடியின நபர் ஆரி, 68 வயது, கோழிக்கொரை.

தங்கள் இருப்பிடத்தில் முக்கியமானவர்களாக கருதப்படும் மண்ணுக்காரன் ஊர் தலைவர் ஜாதிக்காரர்கள் மற்றும் பூசாரி உள்ளிட்ட ஏழு பெயர்கள் மட்டும் அடர்ந்த வனப்பகுதியில் இருக்கும் அவர்களின் குலசாமிக்கு வழிபாடு செய்ய செல்வார்கள். இடத்திற்கு செல்பவர்கள் தங்கள் உறவினர்களுக்கு தெரியாதவாறு மறைவாக தங்கி வாழ்கின்றனர். "அங்கு இயற்கையாக கிடைக்கும் தேன், சிறுதானிய கதிர், காய், கனி, கிழங்கு உள்ளிட்ட உணவுப் பொருட்களை மட்டுமே உண்டு ஏழாம் நாளன்று சுள்ளிவர இலைகளை கோர்த்து உருவாக்கிய இலையாடை இடையாடையாக உடுத்தி அருகே அமைந்துள்ள குகையில் உள்ளே காலங்காலமாக பாதுகாத்து வரப்படும் 'கும்ப தேவரு' என இனங்காணப்படும்ஏழு சுடுமண் பானைகளுக்கு சடங்கு படைகளாக அப்படியே சமைக்காமல் இடுகின்றனர்" (முனைவர்.சி.மகேஸ்வரன், பண்பாட்டு ஆய்வியல், ப.எண்- 182).

## தோடர்கள்

நீலகிரி மலைப் பகுதியில் வாழக்கூடிய தோடர் இன மக்கள் தங்கள் வசிப்பிடங்களை 'மந்து' என பெயரினால் குறிப்பிடுகின்றனர். தோடர் இன மக்கள்தங்கள் உணவு முறைகளில் பால், தயிர், இன்றி அவர்கள் வாழ்வதில்லை. வேட்டையாடாத பழங்குடியின மக்களாக இருக்கும் தோடர்கள் தங்கள் வாழ்வில் எருமை இடம்பெறாத சடங்குகளே கிடையாது. இவர்களை உணவு முறைகளில்

பால், மோர், தயிர், வெண்ணெய், தேன் காட்டுப் பழங்கள், புல்லரிசி, மூங்கில் அரிசி, புல்கிழங்கு போன்றவற்றை உண்டு வாழ்கின்றனர்.

"இப்பழங்குடியினர் தங்கள் இயற்கை சூழலை தெய்வீகம் சார்ந்ததாக கருதி வந்தவர்கள் அதனால்தான் மாமிசம் உண்ணாமல் தெய்வீக அம்சங்களுடன் வாழ்வதாக சொல்கிறார்." (பக்தவத்சல பாரதி, தமிழகப் பழங்குடிகள், ப.எண்- 207.) தோடர்களின் திருவிழா நாட்கள் மக்கள் பால், தயிர், சோறு மட்டுமே உண்ண வேண்டும்.

## கோத்தர்கள்

நீலகிரி மாவட்டத்தில் கீழ் கோத்தகிரி, திருச்சிகிரி போன்ற கிராமங்களில் வாழ்கின்றனர்." தமிழகத்தில் வாழும் மிகவும் தொன்மையான ஆறு பழங்குடியகளில் முதன்மையானவர்கள் தொதவரும் (தோடர்), கோத்தரும். (பக்தவத்சல பாரதி, தமிழகப் பழங்குடிகள்," ப.எண்- 219.) இவர்களின் சடங்குகளில் உணவு என்பது இன்றியமையாததாக உள்ளது பெரும்பாலும் வருபவர்களுக்கு சுப நிகழ்வில் தான் உணவு கொடுக்கின்றோம். ஆனால் கோத்தர்கள் இறப்பின் முழுதும் உணவு கொடுக்கின்றனர். "இவர்களது இறப்புக்கான தீட்டு மூன்று நாட்கள் கடைபிடிக்கப்படும் இறுதி நாள் என்று ஊர் பொதுவில் சமைத்து உண்பார்கள்."(பக்தவத்சல பாரதி, தமிழக பழங்குடிகள், ப.எண்- 221)

## இருளர்கள்

நீலகிரி மாவட்டத்தில் இருளர் பழங்குடியின மக்கள் தினை,சாமை, மக்காச்சோளம் போன்ற உணவுகளையும், வேட்டையாடும் உணவுகளையும் சேகரிக்கின்றனர். இருள மக்கள் வேட்டையாடுதலின் போது அவர்கள் பிற பழங்குடியினரை போல இல்லாமல் அவர்கள் கூட்டமாக வேட்டைக்கு செல்வதுண்டு. இவ்வாறு கூட்டமாக வேட்டைக்கு செல்வதை 'கலப்பை வேட்டை' என்று அழைக்கின்றனர்.

"பாதையின் இரு பக்கங்களில் வேட்டைக்காரர்களும் வேறு சிலர் பொரே தப்பட்டை போன்ற இசைக்கருவிகளை அடித்து சத்தத்தை உண்டாக்கி விலங்குகளை அந்த பாதையில் விரட்டுவர்.பாதையின் இரு மருங்கிலும் ஒளிந்திருக்கும் இருளப்பள்ளர் குறி வைத்து விளங்கிய அடித்துக் கொள்வார்."(இலயோலா சமூக அறிவியல் பயிற்சி மற்றும் ஆய்வு மையம், இருளர்களின் வாழ்வும் வரலாற்றுபூர்வீகமும், ப.எண்- 56)

## பழங்குடியினரின் உணவும் ஆரோக்கியமும்

பழங்குடியின மக்கள் உணவுகள் பெரும்பாலும் வேட்டையாடப்படும் புலால் உணவுகளை சுட்டு உண்பதும், காடுகளில் தயாரிக்கும் உணவுகளான தேன், காய், கனிகள்,காட்டு கீரைகள், காட்டு கிழங்கு, மூங்கில் அரிசி, சாமை,தினை, பால், தயிர் போன்ற உணவு முறைகளை கொண்டவர்களாக வாழ்கின்றனர். பழங்குடியினரின் உறவு முறைகளில் ரசாயன வேதிப்பொருள் இல்லாமல் இயற்கையான உணவு முறைகளை கொண்டுள்ளதாகப் பார்க்கப்படுகிறது.

## பழங்குடியின வாழ்வில் உணவு மாற்றங்கள்

பிரபஞ்சத்தில் மாற்றம் ஒன்றே மாறாத ஒன்று. பழங்குடியின மக்களின் வாழ்வியலும் விட்டு வைக்கவில்லை இன்றைய நவீன வாழ்வு வாழ்க்கையில் அன்றாட மக்களின் தேவைகள் அதிகம் உணவினை பகிர்ந்துண்டு மன நிறைவாக வாழ்ந்த காலம் சென்று நவநாகரீகம் என்ற பெயரில் தனிமனிதனின் தேவைகளை பூர்த்தி செய்யும் காலத்தில் பழங்குடியினரும்,

"பகுத்துண்டுபல்லுயிர்ஓம்புதர்நூலோர்

தொகுத்தவற்றுள்எல்லாந்தலை.” (குறள் -322.)

வள்ளுவரின் சொல்லு கேட்ப வாழ்ந்த பல கோடி இன மக்கள் அத்தியாவசிய தேவையில் ஆடம்பரம் சேர்ந்துள்ளதால் பணத்தின் தேவை மனிதனின் மனதை ஆட்கொண்டுள்ளது. இன்றைய பழங்குடியின மக்கள் தங்களின் வழிபாடுகளிலும், சுப நிகழ்வு மற்றும் இறப்புகளில் மட்டுமே பண்பாட்டையும், பாரம்பரிய உணவுகளையும் காண முடிகின்றது.

## முடிவுரை

பழங்குடியினர் உணவு பண்பாடு அவர்கள் வாழும் இருப்பிடத்தை தழுவிய இடம்பெறுகிறது. இன்றைய சமுதாயத்தில் சாதாரண மக்களைப் போன்று அவர்களுடைய வாழ்க்கை முறையும் உணவு முறைகளும் இருந்தாலும் கூட சடங்குகளில் உணவு பண்பாடு இன்றளவும் பழமையானதாக இருக்கின்றது. உடலுக்கு தேவையான உணவுகளை உண்டு வள்ளுவரின் சொல்லுக்கு ஏற்பநோயின்றிவாழ்வோம்.

“மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்

ஊறுபாடு இல்லை உயிருக்கு” (குறள் -945.)

இவ்உலகில் பண்டையப்பழங்குடியின மக்கள் போல வாழ்வோம்.

## References


பக்தவத்சலபாரதி - தமிழகப்பழங்குடிகள், முதல்பதிப்பு-2007. அடையாளம், 1205/1, கருப்பூர்சாலைபுத்தாநத்தம்-621 310.

முனைவர்.சி.மகேஸ்வரன் - பண்பாட்டுஆய்வியல், முதல்பதிப்பு-2023, பாரதிபுத்தகாலயம், சென்னை-600 018.

எட்கர்தர்ஸ்டன், - தமிழகத்தொல்குடிகள், காதம்பிரங்காச்சாரி.முதல்பதிப்பு-2017.

இலயோலா சமூக அறிவியல் ஆய்வுமையம்- இருளர்களின் வாழ்வும், பயிற்சிமற்றும் வரலாற்றுபூர்வீகமும், முதல்பதிப்பு-2017, பாவைபிரிண்டர்ஸ் (பி)லிட், சென்னை-600 0114.

நே.தேவசகாயம் - கொல்லிமலைவல்வில்ஓரிவிழா, தமிழ்நாடன், முதல்பதிப்பு-1988.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Authors 2024. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License